පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 35

ආයතනයේ නම : කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ ක්‍රම සහ විධි පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තාව සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 124(6) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 35

நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

பாராளுமன்ற முறை மற்றும் விதிமுறைகள் பற்றிய குழு ஆற்றுப்படுத்திய அறிக்கை தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 124(6) இன் பிரகாரம் நிறுவனத்திற்கு பொறுப்புடைய கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் மற்றும் எடுத்த நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No: 35

Name of the institution: Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation

Submission of observations of Hon. Minister and Steps taken with regard to the reports tabled by the Committee on Ways and Means in terms of Standing Order No. 124(6)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 35

நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு பிறப்பித்த உத்தரவுகள்	குழு சுட்டிக் காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு / சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
6.2.1. இலங்கை சுங்கத் திணைக்களத்திற்குரிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ள நிலுவைத் தொகை 58.6 பில்லியன் ரூபாவாகும். அது பிரதானமாக அரச நிறுவனங்கள் கொடுப்பனவுகளை செலுத்தத் தவறியுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலுவை வரியாகும். அவ்வாறு வரி செலுத்தத் தவறிய அரச நிறுவனங்கள் அடங்கிய பட்டியல் பின்னிணைப்பு 1 என குறித்துக் காட்டப்பட்டுள்ளது.	பின்னிணைப்பு 01 இல் சுங்கத் தீர்வையை செலுத்தத் தவறியுள்ள அரச நிறுவனங்களின் பட்டியலில் கமத்தொழில் அமைச்சு குறிப்பிடப்பட்டிருந்தாலும், கொடுப்பனவுகளை செலுத்தத் தவறிய கமத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய உரிய வரியின் அளவு குறிப்பிடப்படவில்லை. ஆகையால்; அது பற்றி இலங்கை சுங்கத் திணைக்களத்திலிருந்து வினவப்பட்டுள்ளது. இது வரை உரிய பதில் கிடைக்கவில்லை. ஆகையால், பதில் கிடைத்தவுடன் அது தொடர்பில் ஒரு விளக்கம் சமர்ப்பிக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.
6.2.28. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (ISFTA) கீழ் இலங்கையில் இருந்து பாக்குகளை ஏற்றுமதி செய்வதற்கு இந்திய அரசாங்கம் 107% சுங்கத் தீர்வை நீங்கிய ஒரு சலுகையை வழங்குகின்றது. எவ்வாறாயினும், இலங்கையினுள் பாக்குகளை ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தாலும், இந்துனீசியா, மலேசியா மற்றும் மியன்மார் முதலிய நாடுகள் சட்டவிரோதமாக பாக்குகளை ஏற்றுமதி செய்து, ஏதாவது ஒரு வகையில் பெறுமதி சேர்த்து பின்னர் இந்தியாவுக்கு மீள ஏற்றுமதி செய்கின்றன.	20/08/17 ஆம் திகதிய 2189/4 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் கீழ் இலங்கைக்கு கொட்டப் பாக்கு இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. ஆயினும் 165/2 ஆம் இலக்க தாவரங்கள் தனிமைப்படுத்தித் தொற்றுநீக்கல் ஒழுங்குவிதிகள் பற்றிய 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானிக்கு இணங்க இலங்கைக்கு பாக்கு இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ள அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ள பல சந்தர்ப்பங்களில் அரசாங்கம் எடுத்த பல தீர்மானங்களின் அடிப்படையில் வெளியிடப்படும் அமைச்சரவைப் பத்திரங்களுக்கு அமைய தாவரங்களை தனிமைப்படுத்தி தொற்றுநீக்கும் தேசிய சேவை நிலையம் பாக்கு இறக்குமதிற்கான இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குகின்றது.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

ඩී.පී. වික්‍රමසිංහ
ලේකම්
කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් සහ වාරිමාර්ග අමාත්‍යාංශය
80/5, "ගොවිජන මන්දිරය"
රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල

6.2.29. தற்பொழுது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள 100 பாக்குக் கொள்கலன்கள் (1493 டொன்கள்) பிடித்து வைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு தொகை அரச உடமையாக்கப்பட்டுள்ளது. 325 மில்லியன் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. பாக்கு இறக்குமதியினால் பல வகையான கிருமிகளும் மற்றும் தொற்றுக்களும் பரவுவதால் தெங்குப் பயிர்கள் பாதிக்கக் கூடியதாகவுள்ளன. இதன் காரணத்தால் பாக்கு இறக்குமதியை விவசாயத் திணைக்களம் தடை செய்துள்ளது.	சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு பாக்கு இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கை சுங்கத் திணைக்களம் அத்தகைய பாக்குத் தொகைகளை பிடித்து வைக்கின்றது. அவ்வாறு பிடித்து வைத்த பாக்குத் தொகைக்கு இலங்கை சுங்கத் திணைக்களம் தாவரங்களைத் தனிமைப்படுத்தித் தொற்றுநீக்கும் நிலையத்தின் சேவையை கோருகின்ற சந்தர்ப்பங்களில் அந்த நிலையம் உரிய பரிசோதனைகளை மேற்கொள்கின்றது. அதே போல் இலங்கைக்கு பாக்குகளை சட்டமுறையாக இறக்குமதி செய்ய முன்னர் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆட்சேபனை ஏதுமில்லை என்ற ஒரு கடிதத்தை வழங்க வேண்டும்.
6.3.31. முதலீட்டு சபை, விவசாயத் திணைக்களம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் என்பன சான்றுபடுத்தி அங்கீகரித்த களஞ்சியசாலைகளில் முதலீட்டு சபையினால் பெறுமதி சேர்த்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை முதலீட்டு சபை (இமுச), ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் திணைக்களம் ஆகியன சுங்கத் தீர்வைகளில் இருந்து விலக்களிப்பைப் பெறுகின்றன. எனினும் தாவரங்களைத் தனிமைப்படுத்தித் தொற்றுநீக்கல் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு சட்டங்கள் பின்பற்றப்படுதல் வேண்டும்.	பெறுமதி சேர்த்தலை செய்வதற்கும் மற்றும் மீள ஏற்றுமதி செய்வதற்கும் கொட்டப் பாக்கை இறக்குமதி செய்வதற்கும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு அங்கீகரித்துள்ளவாறு ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி இணைந்த களஞ்சியசாலையை தெங்கு ஆராய்ச்சி நிறுவகம், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் இயற்கை தாவரங்களை தனிமைப்படுத்தித் தொற்றுநீக்கும் சேவை நிலையமும் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களமும் அங்கீகரிக்க வேண்டும். திருப்தியான சிபாரிசுகளின் பின்னர் முதலீட்டு சபை குறித்த களஞ்சியசாலையை சான்றுபடுத்தி அங்கீகரித்து தொழில்முயற்சி அந்தஸ்தை வழங்கும். அந்த அங்கீகாரத்துடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் பாக்குகளை இறக்குமதி செய்ய தொகையளவில் அனுமதிப் பத்திரத்தை வழங்கும். தற்பொழுது ப்ரைம் ஸ்டார் ட்ரேடிங் கம்பனிக்கு பாக்குகளை இறக்குமதி செய்ய தொகையளவான ஒரு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதே போல் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினதும் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களினதும் அதிகாரிகள் பாக்குகளுக்கு பெறுமதி சேர்த்தல் செயல்முறைக்கு அனுமதியை வழங்க ஏனைய 14 கம்பனிகளின் உற்பத்தி இணைந்த களஞ்சியசாலைகளின் தகுதியை பரிசீலிப்பார்கள்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

ඩී.පී. වික්‍රමසිංහ
ලේකම්
කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් සහ වාරිමාර්ග අමාත්‍යාංශය
80/5, "ගොවිජන මන්දිරය"
රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල

6.2.32. 35% வீத பெறுமதி சேர்த்தல் மத்தியில் ஒரு மெற்றிக் டொன் பாக்கின் அலகு விலை 1300 அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றது. அது உள்நாட்டு விலையை விடவும் கணிசமானளவு குறைவானதாகும். இது இலங்கையில் பாக்கு உற்பத்திற்கு ஏற்படக் கூடிய தாக்கங்கள் பற்றி அவதானத்தை செலுத்த வேண்டிய ஒரு விடயமாகும்.	பெறுமதி சேர்த்த பாக்குகளின் விலை தொடர்பான எந்த ஒரு தகவலையும் முதலீட்டு சபை வெளித்தரப்பில் இருந்து கலந்து கொள்பவர்களுக்கு உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தவில்லை. ஆயினும் 29/03/2023 ஆம் திகதிய 29/0516/631/008 ஆம் இலக்க அமைச்சரைவைத் தீர்மானத்திற்கு இணங்க பாக்கு இறக்குமதிற்கான நடைமுறையை ஒழுங்குறுத்தும் அதிகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகையால், வர்த்தகத் திணைக்களத்தின் உதவியுடன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பாக்கு சந்தை சங்கிலி முறையில் உள்ள சகல ஏற்றுமதித் தரப்புகளையும் மற்றும் விநியோகத் தரப்புகளையும் பதிவு செய்து ஏற்றுமதித் தரப்புகளினது ஏற்றுமதி செயல் திறனையும் மற்றும் ஆற்றலையும் கருத்திற் கொண்டு ஏற்றுமதித் தரப்புகளுக்கு பங்கு அனுமதிகளை வழங்கியுள்ளது. முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தயாரித்து அனுமதித்த நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி சேர்த்தல் கைத்தொழில் செயற்படுத்தப்படுமாயின் உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது. அவ்வாறு செய்யப்படாவிட்டால், உள்நாட்டுப் பாக்கு சந்தைக்கு கடுமையான பாதிப்பு ஏற்படும்.

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

ඩී.පී. වික්‍රමසිංහ
ලේකම්
කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් සහ වාරිමාර්ග අමාත්‍යාංශය
80/5, "ගොවිජන මන්දිරය"